1973 மார்ச் 30]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர் மாற்றப் பட்டுவிட்டாரா, அங்கேயே இருக்கிருரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நமக்கு இந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டு மாற்றவேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனல் சப் கலெக்டர் பாலகிருஷ்ணன் என்பவர் குடும்ப வேலையைக் கவனிக்க 13—1—1973 முதல் 27 நாட்கள் "எர்ன்ட் லீவ்" எடுத்திருக்கிருர். திரும்பி வந்தவுடன் இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றப் பட்டிருக்கிருர்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்படி கீழே பணியாற்றும் சிப்பந்திகள் தங்களுடைய மேல் அதிகாரிகள் கடமை யைச் செய்கிறபொழுது மாற்றவேண்டுமென்று மனுக் கொடுத் தாலோ, தீர்மானம் நிறைவேற்றினலோ, அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுத்தால் இது தொடர்கதையாக வரும். இப்படிப் பட்ட தீர்மானத்தை அரசு ஆதரிக்குமா அல்லது ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே இந்த மாறுதல் நடைபெற வில்லை. ஏனென்றல் தீர்மானம் நிறைவேற்றியது 17—8—1972-ல். இந்த அதிகாரி லீவில் போனது 13—1—1973-ல். திரும்பி வந்த பிறகு அவர் அங்கிருந்து உதகமண்டலத்துக்கு "ஆதரைஸ்டு ஆபீசர் ஆஃப் லேண்டு ரிபார்ம்ஸ்" ஆக அனுப்பப்பட்டிருக்கிருர். நிர்வாக வசதிக்காகச் செய்யப்பட்ட மாறுதலே தவிர நெருக்கடிக்காக அல்ல.

National Cadet Corps.

* 303 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a complaint has been received by the Director of School Education during April 1972 about the irregularity in the selection of National Cadet Corps Officers at Government High School (Boys), Nannilam; and

(*b*) if so, the nature of the complaint and the action taken thereon?

[1973 மார்ச் 30

தேசீய மாணவர் படை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நன்னிலம், அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் தேசீய மாணவர் படை அதிகாரிகளைத் தெரிந்தெடுப்பதில் முறைகேடு நடந்துள்ளதாக, 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு புகார் ஒன்று வந்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அந்தப் புகாரின் தன்மை என்ன? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தேசீய மாணவர் படையில் பகுதி நேர அதிகாரியாக நியமனம் கோரி அனுப்பப்பட்ட மனு ஒன்றை அப்பள்ளித் தலைமையாசிரியர் தேசிய மாணவர் படைத் தலைமையலுவலகத்துக்கு அனுப்பிட மறுத்துவிட்டதாக பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒரு முறையீடு வந்தது. அத்தகைய பகுதி நேர அதிகாரி பதவி ஒன்றுக்கு நிலையான ஊழியத்தில் உள்ள தகுதி பெற்ற இருவர் மனுக்களை மட்டுமே அனுப்பவேண்டுமென்பது தேசிய மாணவர் படைத் துறையின் விதி முறை. அத்தகுதி பெற்ற இருவர் மனுக்களை மட்டுமே அனுப்ப வேண்டியிருந்ததால் பிறவற்றை தலைமை ஆசிரியர் அனுப்பவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தவருன முறையிலே அந்த இரண்டு மனுக்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. முதலில் நான்கு பேர்களுடைய மனுக்கள் அனுப்பப்பட்டு இரண்டு பேர் "செலக்ட்" செய்யப்பட்டார்கள். நேவிலுள்ள ஆர்மி யூனிட்டாக இருந்த காரணத்தால் மறுபடியும் அந்த மனுக்களை அனுப்ப வேண்டுமென்று கேட்டபொழுது, அந்த நான்கு பேர்களில் எந்த இரண்டு பேர் செலக்ட் செய்யப்பட்டார்களோ, அவர்களுடைய மனுக்கள் அனுப்பப்படாமல் வயது அதிகமாக இருந்தது என்ற காரணத்தால், எந்த இரண்டு பேர்களின் மனுக்களைத் தள்ளுபடி செய்தார்களோ அவர்களுடைய மனுக்களை வேண்டுமென்றே அனுப்பியிருக்கிருர்கள் என்பதை அரசு அறியுமா? இது போன்று நடக்காமலிருப்பதற்கு தக்க நடவடிக்கைகள் அரசு இனிமேலாவது எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்கு குறிப்பிட்டிருப்பது முதலிலே தேசிய மாணவர் படை யூனிட் ஆர்மி யூனிட்டாக இருந்தது என்றும் பிறகு நேவி யூனிட்டாக மாற்றப்பட்டதென்றும் முதலிலே இவர்கள் அனுப்பப்பட்டபோது "சீனியாரிட்டி" என்ற அளவிலே 15 ஆண்டுகள் பணி புரிந்தவர், பிறகு $5\frac{1}{2}$ ஆண்டுகள் பணிபுரிந்தவர் என்ற அளவுக்கு இரண்டு பேர் அனுப்பப்பட்டதாகவும், பிறகு மறுபடியும் இரண்டு பேர் அனுப்பப் பட்டதாகவும், அதிலே ஒருவர் வயது அதிகமானவர் என்ற காரணத் தினுல் தள்ளப்பட்டுவிட்டார் என்றும் கடைசியிலே மூன்று அப்ளி கேன்ட்ஸ், திருவாளர்கள் இலக்குமணன், கிருஷ்ணமூர்த்தி, தாயு மானவர் என்பவர்கள் மட்டும் அனுப்பப்பட்டார்கள் என்றும் "none of the candidates where selected for the post" என்றும் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன.

State Planning Commission's Task Force on Education

*304 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the State Planning Commission's Task Force on Education has suggested any change in the duration of school and college education in the State; and

(b) if so, the details thereof and the decision of the Government thereon?

கல்வி குறித்த மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் பணிக்குழு

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள பள்ளி, கல்லூரிகளின் கல்விக் கால அளவை மாற்றுவது குறித்து, கல்வி குறித்த மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் பணிக்குழு கருத்துரை ஏதும் வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை? அதன் மீது அரசு எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிப் படிப்பு பத்து ஆண்டுகள், இண்டர்மீடியட் படிப்பு இரண்டு ஆண்டுகள், கல்லூரிப் படிப்பு இரண்டு அல்லது